# மெட்ரோ ரயில் சேவை - வழிகாட்டு நெறிமுறை வெளியீடு

## காலை 8 முதல் இரவு 8 வரை இயங்கும்

**சென்னை, செப். 3:** சென்னை மெட்ரோ ரயில் சேவை வரும் 7-ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வியாழக்கிழமை வெளியிடப்பட்டன. இதில், காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மெட்ரோ ரயில் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா நோய்த்தொற்று பரவலை தடுக்கும் வகையில், அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தில் தளர்வுகள் அளிக்கப்பட்டதை அடுத்து, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை வரும் 7-ஆம் தேதி முதல் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளில் ரயில்வே அதிகாரிகள், பொறியாளர்கள் ஈடுபட்டுவந்தனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில் சேவை தொடங்குவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வியாழக்கிழமை வெளியிட்டது. இதில், சென்னையில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மெட்ரோ ரயில் இயக்கப்படும் என்றும், பயணிகளின் தேவைக்கு ஏற்ப பொருத்தமான நேரம் மாற்றம் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை விமான நிலையம்- வண்ணாரப்பேட்டை இடையிலான மெட்ரோ ரயில் சேவை 7-ஆம் தேதியும், பரங்கிமலை - சென்னை சென்ட்ரல் இடையிலான சேவை 9-ஆம் தேதியும் தொடங்குகின்றன. அலுவலக நேரமான காலை 8.30 மணி முதல் காலை 10.30 வரையும், மாலை 5 மணி முதல் இரவு வரையும் 5 நிமிஷ இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். மற்ற நேரங்களில் 10 நிமிஷங்களுக்கு ஒரு ரயில் இயக்கப்படும்.



செப். 7 முதல் மெட்ரோ ரயில் இயங்க அனுமதியளிக்கப்பட்டதையடுத்து, சென்னை – கோயம்பேடு மெட்ரோ ரயில் மேம்பாலத்தில் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை ஓட்டம்.

**50 விநாடியாக உயர்வு:** சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் செல்லும் மெட்ரோ ரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, பயணிகள் ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து மாறி, விமான நிலையம் செல்ல கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்கள், மெட்ரோ ரயில்களில் அடிக்கடி கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படும். பயணிகள் ரயில் ஏறுமிடம், இறங்குமிடத்தில் நெரிசல் இல்லாமல் சமூக இடைவெளியுடன் பயணிக்க ஊழியர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவார்கள். சுத்தமான காற்று சுழற்சியை அதிகரிக்கவும், தனிமனித இடைவெளியை பின்பற்றி பயணிகள் ஏறி இறங்கவும் நிலையங்களில் மெட்ரோ ரயில்கள் நிறுத்தப்படும் நேரம் 20 விநாடியில் இருந்து 50 விநாடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ரயில் பயணத்திலும், நடைமேடையில் காத்திருக்கும்போதும் பயணிகள் 6 அடி இடைவெளியை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தனிமனித இடைவெளி குறித்த எக்ஸ் குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன.

**நிலையத்தில் ஏற்பாடுகள்:** மெட்ரோ ரயில் நிலையத்தில் இரண்டு நுழைவாயில்கள் திறக்கப்படும். பிறகு தேவைக்கு ஏற்ப, மற்ற நுழைவாயில்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். நுழைவு வாயிலில் வைக்கப்பட்டுள்ள கை சுத்திகரிப்பான்களில் தங்களது கைகளை சுத்தப்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மெட்ரோ ரயில் நிலைய வளாகத்தில் எப்போதும் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நிலையத்தில் நுழையும்போது, பயணிகள் தெர்மல் ஸ்கேன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். நோய்த்தொற்று உள்ள பயணிகள், உடல் வெப்பநிலை அதிகமுள்ள பயணிகள் மெட்ரோ ரயிலை பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள். மின்தூக்கியில் ஒரே நேரத்தில் அதிகபட்சம் 3 பேர் வரை மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

ரயில் மற்றும் ரயில்நிலையத்தில் குளிர்சாதன வசதி இயக்க மத்திய பொதுப்பணித் துறை மற்றும் இந்திய குளிர்சாதன அமைப்பால் பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறை பின்பற்றப்படும். திறன்பேசி (ஸ்மார்ட் போன்) உள்ள பயணிகள் ஆரோக்ய சேது செயலியை பதிவிறக்கம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கியூஆர் குறியீடு:** மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள டிக்கெட் கவுன்ட்டர்களில் பயண அட்டைகள் (ஸ்மார்ட் கார்டு) வழங்கப்படும். பயணிகள் கியூ ஆர் குறியீடு மூலமாகவும் பயணச் சீட்டு பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வழி பயணச்சீட்டுகள் ஊக்குவிக்கப்பட மாட்டாது. இருப்பினும், பயணிகளின் தேவை அடிப்படையில் சுத்தம் செய்யப்பட்ட டோக்கன்கள் வழங்கப்படும்.